## தலைப்பு 06 – அரசாங்க சேவை ஆணைக்குழு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 06 - அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 23 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 20 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானமற்ற பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய வருமானத் தலைப்புக்கள் சார்பாக ஆணைக்குழுவினால் சேகரிக்கப்பட்ட ரூபா 9,534,266 ஆன வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளாக காட்டப்பட்டிருந்தது. | ஏனைய வருமானத் தலைப்புக்கள் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தால் சேகரிக்கப்பட்ட ரூபா 9,534,266 வருமானம் ஏசீஏ 7 கட்டுநிதி இணக்கக்கூற்றில் சரியாகக் காட்டப்பட்டுள்ள போதிலும் , காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் தாமதத் தவறொன்றால் வருமானம் அல்லாத பெறுவனவுகளாக காட்டப்பட்டிருந்தது. | உரிய மாதிரியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின்படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ஆதனம் சொத்து மற்றும் உபகரணங்களின் மொத்த மதிப்பு ரூபா .854,113,318 ஆக இருந்ததுடன், ஆணைக்குழுவின் நிதிக்4ற்றுக்களில் ரூபா 809,113,318 ஆக ரூபா 45,000,000 குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆதனம் சொத்து மற்றும் உபகரணங்கள் திரண்ட மீதியிலும் அப்பெறுமதி குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட மோட்டார் காரின் ரூபா 50,000,000 ஆன பெறுமதி CIGAS இணையப் பயன்பாட்டில் உள்ளீடு செய்யப்பட்டபோது ரூபா 5,000,000 ஆக உள்ளிடப்பட்டதால் ஏற்பட்ட பிழையே இந்த வேறுபாட்டிற்கு காரணம ஆகும். தற்போது, குறித்த வாகனம் மீண்டும் அமைச்சிற்கு கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் வருட கணக்கு அறிக்கைகளில் இந்த வேறுபாட்டை சரிசெய்வதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | ஆதனம் சொத்து மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட த் வேண்டும். |
| (ii) | ஏசீஎ 06- நிதி அல்லாத சொத்துகளின் கூற்றில் இயந்திரம் மற்றும் பொறிகளின் தொடக்க மீதி ரூபா 32,500 குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் மீதி ரூபா 39,705,896.96 ஆக சரியாக அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் 2022 Cigas திட்டத்தில் ஆரம்ப மீதியாக ரூபா 39,673,396.96 ஆக காட்டப்பட்டிருந்தமை மற்றும் ஆரம்ப மீதியுடன் ரூபா 32,500 ஆன இரண்டு பெறுமதிகள் சேர்க்கப்பட்டமை. புள்ளிவிவரங்கள் இந்தப் பதிவு குறித்து அரச கணக்குகள் திணைக்களத்தின் CIGAS திட்டப் பிரிவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முந்தைய ஆண்டின் இறுதி மீதியானது மீளாய்வாண்டின் தொடக்க மீதித் தொகையாக சரியாகக் காட்டப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இணைப்பு III கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் குறிப்பிடப்படாத மூன்று செலவு விடயங்கள் தொடர்பான ரூபா 1,609,362 ஆன பொறுப்புகள் 2023 ஆம் ஆண்டின் ஏற்பாடுகளில் இருந்து செலுத்தப்பட்டன.அதில் செலவு விடயமொன்றுக்கான பொறுப்பொன்று மீளாய்வாண்டின் செலவினத்திற்கு சீராக்கும்போது ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 494,532 ஆல் விஞ்சப்பட்டது. | இந்த பொறுப்புகள் 2023 ஆம் ஆண்டில் பணம் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட வவுச்சர்கள ஆகும்.எனவே, தேறிய ஒதுக்கீடு விஞ்சப்படவில்லை என்பதுடன் மற்றும் விசாரணையில் குறிப்பிடப்பட்ட திசெம்பர் மாதத்திற்கான பில்களை செலுத்துவதற்கான வவுச்சர்கள் சனவரி மாதத்தில் பெறப்பட்டதால், அவை பொறுப்புகள் அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. ஆண்டிற்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு மட்டுமே ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் , இதன் மூலம் மிகை ஒதுக்கீடுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | ஆண்டு தொடர்பான அனைத்து பொறுப்புகளும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும் மற்றும் ஏற்பாடுகளுக்கு அப்பாற்பட்ட பொறுப்புகள் தவிர்க்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவையின் 11 ஆம் | 2019 மார்ச் 01 ஆம் திகதி முதல் வெற்றிடமாக இருந்த ஆணைக்குழுவின் நிர்வாக அதிகாரி பதவிக்கு கணக்காய்வுத் திகதியான | முகாமைத்துவ சேவைகளின் உயர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட | தாபனக்கோவையின பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | 2023 மார்ச் 31 வரை அதாவது 4 ஆண்டு காலமாக பதில் பணபுரியும் அடிப்படையிலும் , 2021 திசெம்பர் 09 முதல் வெற்றிடமாக இருந்த செயலாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பதில் பணபுரியும் அடிப்படையிலும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் , அந்த பதவிகளை நிரந்தரமாக நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவில்லை. | பரீட்சைகளின் பெறுபேறுகளின்படி, எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள உத்தியோகத்தர்களில் இருந்து நிர்வாக அதிகாரி பதவியை நிரந்தரமாக நிரப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023.04.17 அன்று நிறுவப்பட்ட புதிய ஆணைக்குழுவினால் செயலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஆணைக்குழுவின் 3 குழாம் வாகனங்கள் தொடர்பாக பொது 268(அ) மாதிரிப்படிவம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஓட்டல் கறிப்புக்களில் பொது 268(அ) மாதிரிப்படிவம் தயாரிக்கப்பட வேண்டிய முறை குறித்து சாரதிகள் தெரிவிக்கப்பட்டு, அதை தயார் செய்ய வேண்டும் என்று எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டு ஆணைக்குழுவிற்கு பெறப்பட்டிருந்த கோரிக்கைகளிலிருந்து, 2023 | தொடங்கப்படாததாகக் காணப்பட்ட கடிதங்கள் அந்தந்தப் பிரிவுகளில் பௌதீக ரீதியாக இல்லை | ஆணைக்குழு விற்கு பெறப்படும் கோரிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஏப்ரல் 28 வரையில் 1,342 கோரிக்கைகள் தொடர்பாக ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் தகவல்கள் அழைக்கப்பட்டிருந்ததுடன் 523 கோரிக்கைகளின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடு வருகின்றன. 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பெறப்பட்ட கோரிக்கைகளில் முறையே 07 மற்றும் 11 கோரிக்கைகளின் நடவடிக்கைகள் 2023 ஏப்ரல் 28 வரையில் தொடங்கப்படவில்லை. | என்பதும், ஆவண முகாமைத்துவ அமைப்பில் தரவு உள்ளீட்டின் போது இருமுறை கணக்கிடப்படுவதால் ஏற்படும் நிலைமையொன்றாக அல்லது முன்னேற்ற பிரதி அல்லது கடிதத்தின் பிரதியொன்றாக அல்லது பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்ட கடிதமாகவோ இருக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | உடனடியாகக் கையாளப்படு வதற்கு காணப்படும் தடைகள் மற்றும் பிற குறைபாடுகளைக் கண்டறிந்து உடனடி தீர்வுகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளின்வீகளின் 237 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட மேன்முறையீடொன்று ஆணைக்குழுவிற்கு பெறப்பட்டு, இடமாற்றங்கள் விடயத்தில் 15 நாட்க ளுக்குள்ளும் மற்றும் பதவி உயர்வு விடயத்தில் 45 நாட்களுக்குள்ளும் முடிவொன்று ஆணைக்குழுவினால் எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பரிசீலிக்கப்பட்ட 21 மேன்முறையீட்டுக் கோப்புகளில், 07 இடமாற்ற மேன்முறையீடுகளுக்கான முடிவுகளை வழங்குவதற்கு 45 நாட்களில் இருந்து 1,504 நாட்கள் வரையான காலமொன்று எடுக்கப்பட்டிருந்ததுடன் ஒரு பதவி உயர்வு | மேன்முறையீட்டு பிரிவிற்கு பெறப்பட்ட பெரும்பாலான மேன்முறையீடுகள் அதிகாரிகளால் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்னேற்ற பிரதி வடிவத்தில் அனுப்பப்படுகின்ற மேல்முறையீடுகளாக இருப்பதுடன் அந்த மேல்முறையீடுகள் தொடர்பாக உரிய அமைச்சுக்களிடமிருந்து அவதானிப்பு பரிந்தரைகள் அடங்கிய அறிக்கைகள் மற்றும் கோப்புகளை எடுப்பதற்கு மேல்முறையீட்டு பிரிவினால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன்படி, அத்தகைய அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் கிடைக்கும் வரை, இந்த விடயத்தில் மேற்கொண்ட நடவடிக்கை எடுக்க முடியாது மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பாக முடிவெடுக்கும் நேரம் அதை பொறுத்து மாறுபடும் மற்றும் இது பிரிவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமொன்றாகும். | ஆணைக்குழு விற்கு பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் காணப்படும் தடைகளை கண்டறிந்து தீர்வுகள் எடுக்கப்பட வேண்டும். |

மேன்முறையீடொன்று பெறப்பட்டு 2 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமொன்று எடுக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2023 பெப்ரவரி 20 வரை, அதற்கான முடிவொன்று வழங்கப்படவில்லை.

## 3.2 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 பெப்ரவரி 22 அன்று 116 வகையான டோனர்கள் மற்றும் டிரம்கள் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவற்றில் 17 ஆனது 2020 ஆம் ஆண்டிற்கு முன் வாங்கப்பட்டிருந்ததுடன் 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் முறையே 05, 12, 72 மற்றும் 10 என்றவாறு வாங்கப்பட்டன. | இவற்றில் 33 டோனர்கள் மற்றும் டிரம்களின் மாதிரிகள் அலுவலகத்தில் பயன்படத்தப்படுகின்றன. | களஞ்சியத்தில் காணப்படுகின்ற இருப்பு மீதி தொடர்பாக கவனத்திற் கொண்டு டோனர்கள் மற்றும் டிரம்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட 03 வகையான 08 டோனர்கள் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள் ஆணைக்குழுவில் காணப்படாமை மற்றும் மிகவும் பழமையான இயந்திரங்கள் என்பதால் பயன்பாடு குறைவடைந்தமை காரணமாக அந்த டோனர்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | T Samsung டோனரைப் பயன்படுத்தும் பிரிண்டர்கள் 2016 ஆம் ஆண்டிற்கு முன்பு அலுவலகத்தில் இருந்ததுடன் அவை தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருகின்றது. T SharfAR 5318 டோனரைப் பயன்படுத்தும் 02 புகைப்பட பிரதியெடுக்கும் இயந்திரங்கள் மிகவும் பழமையானவை என்பதால் அதிகளவில் பயனபடுத்தப்படுவதில்லை. | விளைவற்றுக் காணப்படுகினற டோனர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 சனவரி 01 இல் T Brother 2150 வகையில் ஒரு டோனர் களஞ்சியத்தில் காணப்பட்டபோது 2020 | T Brother 2150 மற்றும் 2140 வகையின் டோனர்களைப் பயன்படுத்தும் இயந்திரங்கள் | விளைவற்றுக் காணப்படுகினற டோனர்கள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே 03 மற்றும் 02 டோனர்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் Brother 2140 வகையின் டிரம் ஒன்று 2020 சனவரி 01 அன்று களஞ்சியத்தில் காணப்பட்டபோது, 2021 ஆம் ஆண்டில் மேலும் அதேபோன்ற மற்றொரு டிரம் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. | அவ்வப்போது பழுதுபார்க்கப்படுவதால் மற்றும் நீண்ட காலம் செயல்படாது காணப்பட்டதால் பயன்பாடு குறைந்துள்ளது. தற்போது இந்த டோனர் பயன்படுத்தப்படுகிறது. | பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கிரயம் ரூபா 2,850,000 ஆன வாகனமொன்று 2020 ஒக்டோபர் மாதம் முதல் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 09 வரை இயக்கப்படாமல் நிறுவனத்தின் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2020ஆம் ஆண்டு முதல் இந்த மோட்டார் கார் பழுதுபார்ப்புக்காக அவ்வப்போது பரிந்துரைக்கப்பட்டாலும், தேவையான உதிரி பாகங்கள் கிடைக்காததால் பழுதுபார்ப்புகளை வெற்றிகரமாக மேற்கொளவதற்கு முடியவில்லை. எனவே, இந்த வாகனம் பயனுள்ள முறைகளின் கீழ் அப்புறப்படுததுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தொடர்ந்து மேற்கொண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. | இந்த வாகனம் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட மட்டத்தில் செயலாளர் பதவி மற்றும் மூன்றாம் மட்டத்திலான 04 பதவிகள், இரண்டாம் மட்டத்தில் ஒரு பதவி மற்றும் ஆரம்ப மட்டத்தில் 07 பதவிகளுமாக 13 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் | 2023.01.01 முதல் வெற்றிடமாக உள்ள செயலாளர் பதவி மற்றும் மூன்றாம் நிலையில் இரண்டு பதவிகளின் பணிகள் பதில் பணி புரியும் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளன. | செயல்திறனை மோசமாக பாதிக்கும் அத்தியாவசிய பணியிடங்களில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான முயற்சிகள் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 31 வரை அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | எதிர்காலத்தில், தொழில்நுட்ப அதிகாரி பதவிக்கு முழுநேர ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர் சேவையில் வெற்றிடமாக உள்ள பணியிடங்கள் தொடர்பாக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பதிவாளர் பதவியின் கடமைகள் பணியாளர்களில் உள்ள ஒரு அதிகாரியால் செய்யப்படுகின்றது. ஆரம்ப மட்டத்தில் உள்ள 07 வெற்றிடங்களில் 04 பதவிகளின் கடமைகள் பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 சனவரி 14 இல் 08 நிறைவேற்றுத் தரத்திலான அதிகாரிகள், 38 முகாமைத்துவ சேவை அதிகாரிகள் மற்றும் 11 ஆரம்ப மட்ட அதிகாரிகளின் சேவைக் காலம் 06 ஆண்டுகளைத் தாண்டியுள்ளது. அவற்றில் ஒரு முகாமைத்துவ சேவை அதிகாரியின் ஆணைக்குழுவில் சேவைக் காலம் 20 வருடங்களுக்கும் மேற்பட்டதாக இருந்தது. | வருடாந்த இடமாற்ற சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவில் 05 வருட சேவையை பூர்த்தி செய்த அதிகாரிகளின் தகவல்கள் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விசேட சந்தர்ப்பங்களில், சேவைத் தேவைகளின் அடிப்படையில், ஆணைக்குழுவின் கோரிக்கைகள் மற்றும் செயலாளரின் முடிவின் அடிப்படையில், சில அதிகாரிகளை இடமாற்றங்களுக்காக கருதப்படாமலிருப்பதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளது. | இடமாற்றக் கொள்கை செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்கான விண்ணப்பங்களை கோரும் போது, இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தின் | பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரை நியமிப்பது என்பது அரசியலமைப்பின் 54.10 ஆம் பிரிவின்படி | அதிக அதிகாரிகள் விண்ணப்பிக்கக் கூடிய வகையில் தகுதிகளை மாற்றி |

உத்தியோகத்தர்களிடமிருந்து விசேட தரத்தின் சேவைக் காலமொன்று குறிப்பிடப்படாத போதிலும், 2022 திசெம்பர் 01 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஆட்சேர்ப்பு தகைமைகளின் அனுபவத்திற்காக இலங்கை நிருவாகச் சேவையின் விசேட தரத்தில் 08 வருடங்களுக்குக் குறையாத சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவை காலமொன்றுடன் காணப்படுதல் சிறப்பு நிலையொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தின் இவ்வளவு சேவைக் காலம் கொண்ட உத்தியோகத்தர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்ததால் 2022.12.14 அன்று செயலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்காக 08 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட பணியொன்றாக மற்றும் அதன்படி, அந்த ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முறையில் செயலாளர் உருவரை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக , அதன்படி, செயலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்தல் மற்றும் அதற்கான தகுதிக்கான அளவுகோலொன்று உள்ளடககப்படல் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

அமைக்க வேண்டும்.